நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல்முத்து, **L.L.M.,**

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **20-**ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**32/2012**

**CNR.No.TNMD16-000008-2012**

...

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>ஒத்தக்கடை காவல்நிலையம்<br>குற்ற எண்.204/2011 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | ஜமால்புகாரி, (வயது 64/2025)<br>த/பெ.அப்துல்காதர்,<br>13/2, அப்பு மேஸ்திரி தெரு,<br>சென்னை -1 |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச |
| குற்றம் வனையப்பட்டது | : | எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளன. |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | 05.05.2011 |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 19.07.2012 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | U/s.294 Cr.P.C in Crl.M.P.No.445 of 2026 = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 08.07.2013 | 08.07.2013 |
| PW2 | 08.07.2013 | 08.07.2013 |
| PW3 | 08.07.2013 | 08.07.2013 |
| PW4 | 08.07.2013 | 08.07.2013 |
| PW5 | 08.07.2013 | 08.07.2013 |
| PW6 | 21.02.2014 | 21.02.2014 |
| PW7 | 22.10.2018 | 22.10.2018 |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:47:25 +0530

| | | |
|---|---|---|
| PW8 | 28.05.2025 | 28.05.2025<br>18.03.2026 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 15.04.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | N.A |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | N.A |
| தீர்மானம் | : | எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, இவ்வழக்கில் எழுந்துள்ள ஒட்டுமொத்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி பிரிவு 304(A) இ.த.ச-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும். |

இவ்வழக்கானது கடந்த 19.07.2012-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 20.04.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பூமிநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை :-</u>

எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:47:29 +0530

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

கடந்த 03.05.2011-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு மேலூர் - மதுரை புறவழிச்சாலையில் கொடிமங்கலம் விலக்கு அருகே இவ்வழக்கில் இறந்துபோன முத்துக்காளை என்பவர் தனது இருசக்கர வாகனமான TN 57 AA 9716 என்ற எண் கொண்ட TVS XL வாகனத்தில் இடதுபுற ஓரமாக மெதுவாக போய்க்கொண்டிருக்கும்போது பின்னால் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் TN 09 S 0045 என்ற மோட்டார் காரை எதிரி ஓட்டி வந்து முத்துக்காளை மீது மோதியதால் தலையின் வலது பக்க நெற்றியில் பலத்த காயமும், வலது கால் முறிந்து சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனவே முத்துக்காளை என்பவருக்கு இறப்பை ஏற்படுத்திய எதிரி தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்தவர்களாகிறார் என்று ஒத்தக்கடை காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.32/2012 ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழாக எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச-ன்கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. குற்றசாட்டிற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 26.02.2013 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.5-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.6-ன் மூலம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4-ம், அ.சா.8-ன் மூலம் அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>**4)** அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்</u> **:-**

**4.1)** அ.சா.1 பூமி தனது சாட்சியத்தில் கடந்த 03.05.2011-ம் தேதி தானும், முத்துக்காளை என்பவரும் மாம்பழம் விற்பதற்காக முத்துக்காளை அவரது இருசக்கர வாகனத்திலும் தான்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:47:34 +0530

சைக்கிளிலும் கிடாரிப்பட்டியிலிருந்து கொடிக்குளம் சென்றுகொண்டிருந்தார்கள் என்றும், காலை 10.00 மணிக்கு கொடிக்குளம் விளக்கு அருகே பின்புறமாக வந்த ஒரு கார் அதிவேகமாக வந்து முத்துக்காளையின் இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், அவரது தலை, இடதுகால் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலம் இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், மதியம் 1 மணிக்கு மேலாக அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், தான் ஒத்தக்கடை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், இருசக்கர வாகனத்தின் பதிவு எண்.டி.என்.57 என 9716 என்றும், காரின் பதிவு எண்.டி.என்.09.எஸ்.0045 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 கண்ணன் தனது சாட்சியத்தில் இறந்துபோன முத்துக்காளை தனது அப்பா என்றும், கடந்த 03.05.2011-ம் தேதி சுமார் 11.30 மணிக்கு தனது அப்பா கொடிக்குளம் பாலம் அருகே இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஒரு கார்மோதி விபத்தாகி காயம்பட்டு இராஜாஜி மருத்துவமனையில் இருப்பதாக தகவல் வந்தது என்றும், போய்பார்த்தார் என்றும், தலை, வலது கால் ஆகியவற்றில் காயம்பட்டிருந்தது என்றும், சிகிச்சை பலனிற்றி இறந்துவிட்டார் என்றும், தனது மாமா பூமி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.3)** அ.சா.3 பாப்பு தனது சாட்சியத்தில் இறந்துபோன முத்துக்காளை தனது கணவர் என்றும், கடந்த 03.05.2011-ம் தேதி மதியம் தனது கணவர் கொடிக்குளம் பாலம் அருகே இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஒரு கார்மோதி விபத்தாகி காயம்பட்டு இராஜாஜி மருத்துவமனையில் சேரக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தனது மகன் தகவல் சொல்லி தான் போய் பார்த்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.4)** அ.சா.4 சோங்கு தனது சாட்சியத்தில் இறந்துபோன முத்துக்காளை தனது பக்கத்து வீட்டுக்காரர் என்றும், கடந்த 03.05.2011-ம் தேதி முத்துக்காளை கொடிக்குளம் பாலம் அருகே இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கார்மோதி விபத்தாகி காயம்பட்டு இராஜாஜி மருத்துவமனையில் இருப்பதாக தகவல் வந்தது என்றும், போய்பார்த்தார் என்றும், சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 ராம்பிரவீன் தனது சாட்சியத்தில் கடந்த 30.05.2011-ம் தேதி காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் கையெழுத்து

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:47:39 +0530

செய்தார் என்றும், விபத்தில் சிக்கிய வாகனத்தை எடுப்பதற்காக என்று சொன்னார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள கையொழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

**4.6)** அ.சா.6 ஜெயமணி தனது சாட்சியத்தில் கடந்த 03.05.2011-ம் தேதி மாலை 6 மணிக்கு தான் ஒத்தக்கடை காவல்நிலையப்பொறுப்பில் இருந்தபோது பூமி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், தனது விண்ணப்பத்தின் பேரில் இறந்தவரின் பிரேதம் சடலக்கூறாய்வு செய்யப்பட்டது என்றும், சாட்சிகள் பூமி, ராம்பிரவீன், பாலமுருகன், கண்ணன், பாப்பு, சோங்கு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், விபத்திற்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது என்றும், பின்னர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.7)** அ.சா.7 சந்திரசேகரன் தனது சாட்சியத்தில் கடந்த 04.05.2011-ம் தேதி காலை 10.30 மணிக்கு தலைமைக்காவலராக ஒத்தக்கடை காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது நிலைய குற்ற எண்.204/2011 பிரிவுகள் 279, 337, 304(A) என்ற வழக்கின் இறந்துபோன முத்துக்காளை என்பவரின் பிரேதப்பரிசோதனைக்கு சார்பு ஆய்வாளர் கொடுத்த வேண்டுதல் கடிதத்தை பெற்று மதுரை அரசு மருத்துவமனை உள்ள மருத்துவரிடம் அடையாளம் காண்பித்து பிரேப்பரிசோதனைக்காக ஒப்படைத்தார் என்றும், பிரேதப்பரிசோதனை முடிந்த பின்பு அவரது உடலை அவரது மகன் கண்ணன் என்பவரிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.8)** அ.சா.8 ராமகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் மதுரை மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும், கடந்த 03.05.2011-ம் தேதி காலை 10.30 மணிக்கு பூமி என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று குற்ற எண்.204/2011, இ.த.ச பிரிவுகள் 279, 337 @ 304(A)-ன் வழக்கு பதிவு செய்து சார்பு ஆய்வாளர் 1 முதல் 6 சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், பின்பு இறந்துபோன முத்துக்காளை பிரேதத்தின்மீது பிரேத விசாரணை செய்தார் என்றும், 05.05.2011-ம் தேதி வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார் என்றும், பின்னர் பிரேத விசாரணை ஆய்வு செய்த மருத்துவர் மற்றும் வாகன விபத்து ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனத்தை ஆய்வு செய்த

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:47:45 +0530

மோட்டார் வாகன ஆய்வாளர் கணேச சுப்பிரமணியம் ஆய்வு செய்த வாகன விபத்துக்குள்ளான வாகனம் 2, விபத்தை ஏற்படுத்திய வாகனங்களை ஆய்விற்கு உட்படுத்தி ஆய்வறிக்கைகளை வழங்கிய இருவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், மருத்துவர் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.5 என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை எண்ணிக்கை அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 என்றும், ஏற்கனவே சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த பட்டியல் சாட்சிகளை மேல் விசாரணை செய்தார் என்றும், அவர் புதிதாக எதுவும் சொல்லாததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், இந்த குற்ற வழக்கில் அறிபூர்வ விசாரணையிலும், தனது புலன்விசாரணையிலும் குற்ற புலனாய்வில் துலங்கியதால் குற்ற இறுதி அறிக்கை 11.05.2011-ம் தேதி இ.த.ச பிரிவுகள் 279, 337 @ 304(A) -ன் கீழ் தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** <u>குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)**(ஆ)**-**ன் கீழான விசாரணை</u>

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார். மேலும் அவர் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார். அதனால் எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு:</u>

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் குற்றம் புரிந்துள்ளார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

**7)** <u>எதிரி தரப்பில் வாதம் பின்வருமாறு:</u>

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரி மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:47:49 +0530

**8)** <u>தீர்வு</u> **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** கடந்த 03.05.2011-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு மேலூர் - மதுரை புறவழிச்சாலையில் கொடிமங்கலம் விலக்கு அருகே இவ்வழக்கில் இறந்துபோன முத்துக்காளை என்பவர் தனது இருசக்கர வாகனமான TN 57 AA 9716 என்ற எண் கொண்ட TVS XL வாகனத்தில் இடதுபுற ஓரமாக மெதுவாக போய்க்கொண்டிருக்கும்போது பின்னால் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் TN 09 S 0045 என்ற மோட்டார் காரை எதிரி ஓட்டி வந்து முத்துக்காளை மீது மோதியதால் தலையின் வலது பக்க நெற்றியில் பலத்த காயமும், வலது கால் முறிந்து சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனவே முத்துக்காளை என்பவருக்கு இறப்பை ஏற்படுத்திய குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

<u>**10)** இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>

i) சம்பவ தினத்தன்று எதிரி TN 09 S 0045 என்ற மோட்டார் காரை ஓட்டி வந்தார் என்பது அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

ii) அவ்வாறு எனில் மேற்படி TN 09 S 0045 என்ற மோட்டார் காரை முரட்டுத் தனமாகவோ, அல்லது கவனக்குறைவாகவோ மனித உயிருக்கு ஆபத்து மற்றும் காயம் விளைவிக்கும் வகையில் பொது பாதையில் ஓட்டி வந்தார் என்பதை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

iii) மேலும் எதிரி மேற்படி முரட்டுத்தனமான அல்லது கவனமற்ற செய்கையால் ஒருவருக்கு மரணத்தை விளைவித்தார் என்பது அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

iv) எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எல்லாவித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>**11)** பிரச்சனைக்கான தீர்வு மற்றும் காரணங்கள்</u>

இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருப்பதால் அனைத்து பிரச்சனைகளும் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:47:54 +0530

**11.1)** சாட்சிகளை பரிசீலனை செய்யும் முன்பாக இ.த.ச பிரிவு 304(A)-ன் ஆக்க கூறுகளை பார்க்க வேண்டியது. சாலை விபத்து வழக்குகளில் ஒரு நபரை இ.த.ச பிரிவு 304(A)-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்ய வேண்டும் என்பதால் அரசு தரப்பில் பின்வரும் கூறுகளை நிரூபிக்க வேண்டும்.

i) முதலாவதாக இறந்த நபர் விபத்தின் காரணமாக இறந்திருக்க வேண்டும்.

ii) இரண்டாவதாக எதிரி தான் விபத்திற்கு காரணமாக இருக்க வேண்டும்.

iii) மூன்றாவதாக எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் அந்த விபத்து ஏற்பட்டிருக்க வேண்டும்.

**12)** முதலாவதாக விபத்து அரசு தரப்பில் சொல்லப்படும் இடத்தில் தான் நடந்துள்ளது என்பதற்கும், இறந்த நபர் விபத்தின் காரணமாக தான் இறந்துள்ளார் என்பதற்கும் அரசு தரப்பில் இருந்து விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியாக அ.சா.1 பூமி தனது சாட்சியத்தில் கடந்த 03.05.2011-ம் தேதி தானும், முத்துக்காளை என்பவரும் மாம்பழம் விற்பதற்காக முத்துக்காளை அவரது இருசக்கர வாகனத்திலும் தான் சைக்கிளிலும் கிடாரிப்பட்டியிலிருந்து கொடிக்குளம் சென்றுகொண்டிருந்தார்கள் என்றும், காலை 10.00 மணிக்கு கொடிக்குளம் விளக்கு அருகே பின்புறமாக வந்த ஒரு கார் அதிவேகமாக வந்து முத்துக்காளையின் இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், அவரது தலை, இடதுகால் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலம் இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், மதியம் 1 மணிக்கு மேலாக அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். பிறகு சாட்சிகளாக விசாரித்த அ.சா.2, அ.சா.3, அ.சா4 சாட்சிகள் அ.சா.1-ன் சாட்சியத்தினை ஒத்துரைத்து ஒரு கார் முத்துக்காளை என்பவரை மோதியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**13)** அவர்களது சாட்சியத்தின் மூலம் சம்பவ இடத்தில் தான் விபத்து நடந்தது என்பதற்கான போலீசார் தயாரித்த அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி அமைந்துள்ளது. அதன் அடிப்படையில் பார்க்கும் போது அரசு தரப்பால் சொல்லப்பட்டுள்ள இடத்தில் தான் விபத்து நடந்துள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் அவரது சாட்சியத்தை ஒத்துரைக்கும் விதமாக விபத்து நடந்தது குறித்தும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தையும், விபத்துக்குள்ளான வாகனத்தையும் பரிசோதனை செய்து அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7-ஐ பரிசீலனை செய்யும் போது விபத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெளிவாகிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:48:00 +0530

**14)** அ.சா.8-ன் சாட்சியத்தின் அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை அறிக்கை பரிசீலனை செய்யும் பொழுது இறந்துபோன முத்துக்காளை என்பவர் விபத்தின் காரணமாக தான் இறந்துள்ளார் என்று தெரியவருகிறது. மேலும் இறந்த நபர் விபத்தின் காரணமாக தான் இறந்தார் என்பதை நிரூபிப்பதற்கு சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 03.05.2011-ம் தேதி தானும், முத்துக்காளை என்பவரும் மாம்பழம் விற்பதற்காக முத்துக்காளை அவரது இருசக்கர வாகனத்திலும் தான் சைக்கிளிலும் கிடாரிப்பட்டியிலிருந்து கொடிக்குளம் சென்றுகொண்டிருந்தார்கள் என்றும், காலை 10.00 மணிக்கு கொடிக்குளம் விளக்கு அருகே பின்புறமாக வந்த ஒரு கார் அதிவேகமாக வந்து முத்துக்காளையின் இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், அவரது தலை, இடதுகால் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலம் இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், மதியம் 1 மணிக்கு மேலாக அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே விபத்து அரசு தரப்பில் சொல்லப்படும் இடத்தில் தான் நடந்தது என்றும், அந்த விபத்தின் காரணமாக தான் இறந்தவரின் இறப்பு ஏற்பட்டது என்றும், அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**15)** இரண்டாவதாக எதிரி தான் வாகனத்தை அஜராக்கிரதையாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தி இறப்பிற்கு காரணமானவர் என்பதை நிரூபிக்க அரசு தரப்பில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 பூமி தனது சாட்சியத்தில் கடந்த 03.05.2011-ம் தேதி தானும், முத்துக்காளை என்பவரும் மாம்பழம் விற்பதற்காக முத்துக்காளை அவரது இருசக்கர வாகனத்திலும் தான் சைக்கிளிலும் கிடாரிப்பட்டியிலிருந்து கொடிக்குளம் சென்றுகொண்டிருந்தார்கள் என்றும், காலை 10.00 மணிக்கு கொடிக்குளம் விளக்கு அருகே பின்புறமாக வந்த ஒரு கார் அதிவேகமாக வந்து முத்துக்காளையின் இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** அ.சா.2 கண்ணன் தனது சாட்சியத்தில் இறந்துபோன முத்துக்காளை என்பவர் தனது அப்பா என்றும், கடந்த 03.05.2011-ம் தேதி சுமார் 11.30 மணிக்கு தனது அப்பா கொடிக்குளம் பாலம் அருகே இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஒரு கார்மோதி விபத்தாகி காயம்பட்டு இராஜாஜி மருத்துவமனையில் இருப்பதாக தகவல் வந்தது என்றும், போய்பார்த்தார் என்றும், தலை, வலது கால் ஆகியவற்றில் காயம்பட்டிருந்தது என்றும், சிகிச்சை பலனிற்றி இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:48:05 +0530

**17)** அ.சா.3 பாப்பு தனது சாட்சியத்தில் இறந்துபோன முத்துக்காளை தனது கணவர் என்றும், கடந்த 03.05.2011-ம் தேதி மதியம் தனது கணவர் கொடிக்குளம் பாலம் அருகே இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஒரு கார்மோதி விபத்தாகி காயம்பட்டு இராஜாஜி மருத்துவமனையில் சேரக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தனது மகன் தகவல் சொல்லி தான் போய் பார்த்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18)** அ.சா.6 ஜெயமணி தனது சாட்சியத்தில் கடந்த 03.05.2011-ம் தேதி மாலை 6 மணிக்கு தான் ஒத்தக்கடை காவல்நிலையப்பொறுப்பில் இருந்தபோது பூமி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், தனது விண்ணப்பத்தின் பேரில் இறந்தவரின் பிரேதம் சடலக்கூறாய்வு செய்யப்பட்டது என்றும், சாட்சிகள் பூமி, ராம்பிரவீன், பாலமுருகன், கண்ணன், பாப்பு, சோங்கு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், விபத்திற்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது என்றும், பின்னர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**19)** அ.சா.7 சந்திரசேகரன் தனது சாட்சியத்தில் கடந்த 04.05.2011-ம் தேதி காலை 10.30 மணிக்கு தலைமைக்காவலராக ஒத்தக்கடை காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது நிலைய குற்ற எண்.204/2011 பிரிவுகள் 279, 337, 304(A) என்ற வழக்கின் இறந்துபோன முத்துக்காளை என்பவரின் பிரேதப்பரிசோதனைக்கு சார்பு ஆய்வாளர் கொடுத்த வேண்டுதல் கடிதத்தை பெற்று மதுரை அரசு மருத்துவமனை உள்ள மருத்துவரிடம் அடையாளம் காண்பித்து பிரேப்பரிசோதனைக்காக ஒப்படைத்தார் என்றும், பிரேதப்பரிசோதனை முடிந்த பின்பு அவரது உடலை அவரது மகன் கண்ணன் என்பவரிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**20)** அ.சா.8 ராமகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் மதுரை மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும், கடந்த 03.05.2011-ம் தேதி காலை 10.30 மணிக்கு பூமி என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று குற்ற எண்.204/2011, இ.த.ச பிரிவுகள் 279, 337 @ 304(A)-ன் வழக்கு பதிவு செய்து சார்பு ஆய்வாளர் 1 முதல் 6 சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், பின்பு இறந்துபோன முத்துக்காளை பிரேதத்தின்மீது பிரேத விசாரணை செய்தார் என்றும், 05.05.2011-ம் தேதி வழக்கினை தனது

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:48:10 +0530

விசாரணைக்கு எடுத்துக்கொண்டார் என்றும், பின்னர் பிரேத விசாரணை ஆய்வு செய்த மருத்துவர் மற்றும் வாகன விபத்து ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கணேச சுப்பிரமணியம் ஆய்வு செய்த வாகன விபத்துக்குள்ளான வாகனம் 2, விபத்தை ஏற்படுத்திய வாகனங்களை ஆய்விற்கு உட்படுத்தி ஆய்வறிக்கைகளை வழங்கிய இருவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், மருத்துவர் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.5 என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை எண்ணிக்கை அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 என்றும், ஏற்கனவே சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த பட்டியல் சாட்சிகளை மேல் விசாரணை செய்தார் என்றும், அவர் புதிதாக எதுவும் சொல்லாததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், இந்த குற்ற வழக்கில் அறிபூர்வ விசாரணையிலும், தனது புலன்விசாரணையிலும் குற்ற புலனாய்வில் துலங்கியதால் குற்ற இறுதி அறிக்கை 11.05.2011-ம் தேதி இ.த.ச பிரிவுகள் 279, 337 @ 304(A) -ன் கீழ் தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**21)** இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில் ஒரு கார் அதிவேகமாக வந்து முத்துக்காளையின் இருசக்கர வாகனத்தில் மோதியது என்று சாட்சியம் அளித்துள்ளாரே தவிர விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு எண் குறித்து அ.சா.1 சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டி வந்ததாகவும் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் ஒரு கார் மோதி விபத்து ஏற்படுத்தியதாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள். எதிரி தான் விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டி வந்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி விபத்து ஏற்படுத்தியது இவ்வழக்கின் எதிரி தான் என்று எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே எதிரி தான் விபத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் எந்தவொரு கண்ணுற்ற சாட்சி மூலம் அல்லது வேறு எந்த சாட்சிகள் மூலமும் நிரூபிக்கவில்லை. அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகிய சாட்சிகள் சம்பவத்தை கேள்விபட்டு மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சென்று முத்துக்காளையை பார்த்ததாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகிய சாட்சிகள் தங்களது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "சம்பவத்தை பற்றி நேரில் பார்க்கவில்லை." என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:48:15 +0530

**22)** இவ்வழக்கில் அனைத்து சாட்சிகளும் விபத்து நடந்தது என்று சாட்சியம் அளித்ததை தவிர எதிரியின் செய்கை கவனமின்மையாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டியதன் மூலமாக விபத்து ஏற்பட்டது என்று எந்தவொரு சாட்சியமும் அளிக்கப்படவில்லை.

**23)** பொதுவாக விபத்து ஏற்படும் வழக்கில் எதிரியின் அசட்டைத்தனமாக மற்றும் முரட்டுத்தனமாக அதிவேகமாக ஓட்டி வந்தும் விபத்தை ஏற்படுத்தி உள்ளார் என்பது தெளிவாக்கப்படவில்லை. அதனை உறுதிபடுத்தும் விதமாக அரசு தரப்பு வழக்கு அமையவேண்டும். அது இல்லை என்றால் அரசு தரப்பு வழக்கு பாதகமாகவும், அதில் ஏற்படும் சந்தேகங்கள் எதிரிக்கு சாதகமாகவும் அமையும், இவ்வாறு இருக்கையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வரும் தீர்ப்பில் "***State of Karnataka -vs- Sathish (1998) 8 SCC 493***
“4. Merely because the truck was being driven at a "high speed" does not bespeak of either "negligence" or "rashness" by itself. None of the witnesses examined by the prosecution could give any indication, even approximately, as to what they meant by "high speed". "High speed" is a relative term. It was for the prosecution to bring on record material to establish as to what it meant by "high speed" in the facts and circumstances of the case. In a criminal trial, the burden of providing everything essential to the establishment of the charge against an accused always rests on the prosecution and there is a presumption of innocence in favour of the accused until the contrary is proved. Criminality is not to be presumed, subject of course to some statutory exceptions. There is no such statutory exception pleaded in the present case. In the absence of any material on the record, no presumption of "rashness" or "negligence" could be drawn by invoking the maxim "res ipsa loquitur".”

**24)** மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றொரு வழக்கில் பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது. “***Ravi Kapur -vs- State of Rajasthan (2012) 9 SCC 285***
"18. In light of the above, now we have to examine if negligence in the case of an accident can be gathered from the attendant circumstances." We have already held that the doctrine of res ipsa loquitur is equally applicable to the cases of accident and not merely to the civil jurisprudence. Thus, these principles can equally be extended to criminal cases provided the attendant circumstances and basic facts are proved. It may also be noticed that either the accident must be proved by proper and cogent evidence or it should be an admitted fact

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:48:19 +0530

before this principle can be applied. This doctrine comes to aid at a subsequent stage where it is not clear as to how and due to whose negligence the accident occurred. The factum of accident having been established, the Court with the aid of proper evidence may take assistance of the attendant circumstances and apply the doctrine of res ipsa loquitur. The mere fact of occurrence of an accident does not necessarily imply that it must be owed to someone's negligence. In cases where negligence is the primary cause, it may not always be that direct evidence to prove it exists. In such cases, the circumstantial evidence may be adduced to prove negligence. Circumstantial evidence consists of facts that necessarily point to negligence as a logical conclusion rather than providing an outright demonstration thereof. மேற்கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு முடிவுகளை கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிகளை முழுமையாக பரிசீலனை செய்ததில் விபத்து ஏற்பட்டுவிட்டது என்பதாலும், உயிர் இழப்பு நேர்ந்துவிட்டது என்பதாலும், எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் அனுமானம் கொள்ள இயலாது. எதிரியின் செய்கைக்கும், விபத்திற்கும் நேரடி தொடர்பு இருக்க வேண்டும். இவ்வழக்கில் எதிரியின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவினாலும் தான் விபத்து ஏற்பட்டது என்பது சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை.

**25)** மேலும் இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரேத பரிசோதனை அறிக்கையான அ.சா.ஆ.5-ஐ கவனமாக பரிசீலனை செய்ததில் விபத்தில் இறந்தவருக்கு தலையின் வலது முன்பக்க பகுதியிலும், வலது தோள்பட்டையிலும், வலது காலிலும், வலது முழங்கையிலும் காயம் ஏற்பட்டு அதன் விளைவால் மரணம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விபத்துக்குள்ளான வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.6-ல் முன்பக்க பிரேக் கைப்பிடி உடைந்துள்ளதாகவும், Foot Step rest வளைந்துள்ளதாகவும், platform shild வளைந்துள்ளதாகவும் சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய இரண்டு ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில் அரசு தரப்பு வழக்கில் கூறப்பட்டுள்ளது போல் விபத்து முத்துக்காளை ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் எதிரி அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் தனது காரை இயக்கி வந்து விபத்து ஏற்படுத்தியிருந்தால் முத்துக்காளையின் வாகனத்தின் பின்புறத்தில் சேதங்கள் ஏற்பட்டிருக்கும். மேலும் முத்துக்காளையின் உடம்பில் பின்பகுதியில் அல்லது விபத்தின் தாக்கத்தில் உடம்பின் முன்பகுதியில் காயங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால் விபத்தில்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:48:24 +0530

இறந்தவருக்கு அனைத்து காயங்களும் வலதுபுறத்திலேயே ஏற்பட்டுள்ளது. எனவே அரசு தரப்பு வழக்கின்படி எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இயக்கி முத்துக்காளை ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**26)** முடிவாக எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி இ.த.ச பிரிவு 304(A)-ன்படி குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**27)** இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**28)** மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:48:29 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 08.07.2013 | பூமி |
| அ.சா.2 | 08.07.2013 | கண்ணன் |
| அ.சா.3 | 08.07.2013 | பாப்பு |
| அ.சா.4 | 08.07.2013 | சோங்கு |
| அ.சா.5 | 08.07.2013 | ராம்பிரவின் |
| அ.சா.6 | 21.02.2014 | ஜெயமணி |
| அ.சா.7 | 22.10.2018 | சந்திரசேகரன் |
| அ.சா.8 | 28.05.2025 | ராமகிருஷ்ணன் |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | குறியீடு செய்த சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் |
| அ.சா.ஆ.2 | அ.சா.5 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | அ.சா.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | அ.சா.8 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.6 | அ.சா.3 | TN 57 AA 9716 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.7 | அ.சா.3 | TN 09 S 0045 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:- இல்லை</u>

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>,
<u>குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>: இல்லை

<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணைகாலத்தில், எதிரி நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.20 05:48:35 +0530